திருநெல்வேலி
● சனி ● ஆகஸ்ட் 17 2019
www.dinamalarnellai.com
நெல்லை



பாளை., சாரதா கல்லூரியில் சுதந்திர தின விழா நடந்தது.

★ பாளை. சாரதா கல்லூரியில் நடந்த சுதந்திர தின விழாவில் முதல்வர் மலர்விழி தலைமை வகித்தார். நாகர்கோவில் விவேகானந்தா மருத்துவ ஆய்வகத்தின் டாக்டர் சீனிவாச கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தேசிய கொடியேற்றி வைத்து பேசினார். உதவி பேராசிரியை ரேவதி வரவேற்றார். கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா அம்பா ஆசி வழங்கினார்.

உதவி பேராசிரியை லலிதா, மாணவி அருள் விநாயக மாலதி சுதந்திர தினம் குறித்து பேசினர். கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

பேராசிரியைகள், மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாணவியர் பேரவை துணைத் தலைவி ஸ்நேகா நன்றி கூறினார்.